'' கண்ணைக் காப்பது இமை ''
'' மண்ணைக் காப்பது மழை ''

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2013-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது "**

**பொருள் : இல்வாழ்க்கை, அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அவ்வாழக்கையின் பண்பும் பயனும் அதுவேயாகும்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>சி.டபிள்யு.2/1338/2012</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **09.11.2012**-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.301</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**2) <u>மநி 2/027415/2012</u>**

மதுரை மாநகராட்சிப் பணிவிதிகள் 1996–ன்படி பொறியியல் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களை ஐந்து பிரிவுகளாக பிரித்து உத்தரவிட்டதின் பேரில் அரசாணை எண். 338 (நிதி) நாள் 26.08.2010-ன்படி அலுவலக உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள், மற்றும் சூவர் கிளீனர்கள் நீங்கலாக பொறியியல் பிரிவில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்து ஊதிய நிலுவைத் தொகை வழங்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.302</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**3) மே3/எ4/00478/2012**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3ல் பணிபுரிந்து வரும் தமிழ்நாடு முன்னாள் ராணுவத்தினர் கழகத்தை சார்ந்த (Texco – Chennai, The Government of Tamilnadu Under taking ) பணியாளர் கீழ் கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றார்கள்.

1. காவலர்கள் (Security Guard) – 3 நபர்கள்

அரசு ஆணை எண். G.O.(M.S.) 456 நாள் : 17.05.2012 ல் Public (Ex – serviceman) Department TEXCO அடிப்படையில் பணியாளர்களுக்கு 10% ஊதிய உயர்வு கீழ்கண்டவாறு (01.06.2012) முதல் ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண். | பதவி | தற்போது வழங்கப்படும் ஊதியம் | 01.06.2012 முதல் வழங்க வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| 1. | காவலர் | **7690** | **8906** |

மேற்கண்டவாறு ஊதியத்திற்கு சேவை கட்டணம் 12% சேவை வரி 10% கல்வி வரி 2% உயர்நிலை பள்ளி கல்வி வரி 1% வழங்க வேண்டியுள்ளது.

எனவே மேற்படி நிறுவனத்திற்கு பட்டியலில் குறிப்பிட்டுள்ள விபரப்படி ஊதியம் மற்றும் நிலுவைத் தொகையினையும் வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.303**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**4) மவ1/மபொ4/23605/2012**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணாமாளிகை மூன்றாம் தளத்தில் இயங்கி வந்த மதுரை மண்டல நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலகம் தற்போது காலி செய்து சென்று விட்டபடியால் அந்த இடத்தில் உள்ளாட்சி நிதி தணிக்கை துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களை வாடகை அடிப்படையில் வழங்க கோரிய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மண்டல துணை இயக்குநர் அவர்களின் 19.06.2012ம் தேதிய கடிதம் எண்.2035/அ1/2012 வாசிக்கப்பட்டு ஷை கோரிக்கையின் பேரில் உதவி ஆணையாளர்(கணக்கு) அவர்களால் குறிப்பு தயார் செய்யப்பட்டு பொறியியல் பிரிவு மூலம் மாத வாடகை ரூ.56,200/-என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதன் அடிப்படையில் மூன்றாம் தளத்தில் மேற்படி அலுவலகம் செயல்படுவதற்கு அனுமதிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.304**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**5) மநி 2/001488/2012**

அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 12.05.1998-ன் அடிப்படையில், மாநகராட்சியின் புதிய பொது விதி 1996-ன்படி மதுரை மாநகராட்சிக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் 3 பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஒரு பணியாளர் பணியாற்றி வருகிறார். 01.01.2012 அன்று முதல் இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளது.

அரசாணை எண். 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 26.09.1996-ன்படி சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு நியமனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| Steno Typist | By Direct Recruitment | i) Must have passed Higher Secondary School Examination.<br>ii) A pass in Typewriting English and Tamil in Senior Grade of the Government Technical Examination and |
| | By Transfer | iii) A Pass in Shorthand English and Tamil of Government Technical Examination any one in Senior Grade and the other in Junior Grade and |

iv) Must have passed the foundational training course prescribed for the Corporation Service before completion of probation.

மேற்கண்ட அரசாணையின்படி தெரிவிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியின் அடிப்படையில் தற்போது பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர் நிலையிலுள்ள ஒருவரும் மேற்படி கல்வித் தகுதி முடிக்கப்படாத நிலையில் முற்றிலும் தற்காலிகமாக காலியாக உள்ள 2 பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் பெற்று மேற்கண்ட பணியிடங்களை நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.305</u>**
**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**6) <u>மவ5/030179/12</u>**

1971ம் வருடத்திய மதுரை மாநகராட்சி சட்டம் விதி எண்.358ன்படி மதுரை மாநகராட்சி எல்லைக்குள் தனியாரால் நடத்தப்படும் பார வண்டி நிறுத்தப்படும் இடங்களுக்கு (வாகன காப்பகங்கள்) மதுரை மாநகராட்சியிடமிருந்து ஒவ்வொரு வருடமும் உரிமம் பெறப்பட வேண்டும். இந்த விதியின்படி கொடுக்கப்படும் உரிமம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1,200/- கட்டணம் விதிக்கலாம்.

மேற்படி கட்டணம் 1971-ம் வருடம் நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே தற்போதைய ரூபாய் மதிப்பினை கருத்திற்கொண்டும், மதுரை மாநகராட்சியின் வருவாயை கருத்திற்கொண்டும் பரப்பளவு 5,000 சதுர அடிக்குள் உள்ள தனியார் வாகன காப்பகங்களுக்கு ஆண்டு உரிமைக்கட்டணம் ரூ.15,000/-எனவும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ.3/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.306</u>**
**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**7) <u>மநி.5/29832/2012</u>**

மதுரை மாநகராட்சி தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கம் 08.02.2013 முதல் 10.02.2013 வரை மதுரை மாநகரின் வரலாற்றையும், தொன்மையையும் போற்றும் வகையில் மக்கள் பங்களிப்புக்குரிய கலைவிழா "மாமதுரையை போற்றுவோம் விழா" நிகழ்ச்சி நடத்த இருப்பதால் தமுக்கம் மைதானம் வாடகையை சலுகை கட்டணத்தில் வழங்குமாறு விழாக்குழு துணைத்தலைவர் கோரியுள்ளார்.

மாமன்ற தீர்மானம் எண். 109 நாள் 25.04.2012 –ன்படி தமுக்கம் மைதானம் நாள் ஒன்றுக்கு வாடகையாக ரூ.45,000/- மற்றும் கலையரங்கம் ரூ.24,000/- ஆக நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட "மாமதுரையை போற்றுவோம் விழா" நிகழ்ச்சி நடத்த சலுகை அடிப்படையில் வாடகை கட்டணத்தை குறைப்பதற்கு மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.307</u>**

**<u>மாமதுரையை போற்றுவோம் நிகழ்ச்சி மதுரை மாநகராட்சியிடன் இணைந்து நடத்துவதால் சலுகை கட்டண அடிப்படையில் தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கம் நாள் வாடகையாக ரூ.1000 மற்றும் மின் கட்டணம் செலுத்த நிர்ணயித்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 09.01.2013**

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்
# Table Agenda - நாள் : 09.01.2013

**1) B11/28266/12**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் 01.07.2012 முதல் அகவிலைப்படி 65% லிருந்து 72% ஆக வழங்க அரசாணை எண்–365 நிதித்(ஓய்வூதியம்)துறை, நாள்:08.10.2012–ல் உத்தரவிடப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணைக்கு பின்னேற்பு கோரி மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.308**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) B11/38989/12**

மதுரை மாநகராட்சியில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் திருநகர், ஹார்விபட்டி,விளாங்குடி ஆகிய மூன்று பேரூராட்சிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம் – அலுவலக ந.க.எண்.15753/பே.ஒ.வ(3)/2011, நாள்:12.12.11–ன் படி பணியாளர்களின் ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் டிசம்பர் 2011 மாதம் முதல் அந்தந்த மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க தெரிவிக்கப்பட்டதின் பேரில் மேற்காணும் பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்று / காலம் சென்ற ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் 31 நபர்களுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. (தீர்மானம் எண்–253/27.09.12).

அதே போன்று ஹார்விபட்டி,விளாங்குடி பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற / காலம் சென்ற ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்

1. திருமதி.M.பாண்டியம்மாள் (குடும்ப ஓய்வூதியர்)
2. திருமதி.Pசுப்புலெட்சுமி (குடும்ப ஓய்வூதியர்)
3. திருமதி.M.கருப்பாயி (ஓய்வூதியர்)
4. திரு.M.சுப்பையா (குடும்ப ஓய்வூதியர்)

ஆகிய நான்கு நபர்களுக்கு மதுரை மாநகராட்சி நிதியிலிருந்து டிசம்பர்–2011 மாதம் முதல் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு வழங்கப்பட்டு வருவதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.309**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**3) CW3 /1100/2012**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை, வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாப்பு பணிக்கு திரு.வி.வி.மீனாட்சிசுந்தரம் டெக்ஸ்கோ பணியாளர் வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக பணியாற்றி வருவதால், ஏற்கனவே வழங்கி வரும் சேவை கட்டணம் அடிப்படையில் 01.10.2012 முதல் 30.10.2013 வரை மேலும் ஓராண்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அலுவலக பாதுகாவலராக டெக்ஸ்கோ பணியாளரின் சேவையை பயன்படுத்துவதற்கும் அதற்கான செலவினத்தை ஏற்றுக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>குறிப்பு :</u>

1) ஏற்கனவே **30.09.2012** முடிய சேவை செய்யவும் அதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத் தீர்மான **எண்.80**, நாள்: **30.11.2011–ல்** ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
2) **01.10.2012** முதல் ஒரு வருடத்திற்கு மேற்கண்ட சேவையை நீட்டிப்பு செய்து கொள்ள ஒப்பந்தப்பத்திரம் டெக்ஸ்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.
3) **01.10.2012** முதல் **30.09.2013** வரை சேவைக் கட்டணம் மாதம் ஒன்றிற்கு **ரூ.10,241**/- மற்றும் வரிகள் உட்பட **ரூ.12,888**/- வீதம் ஒரு வருடத்திற்கு **ரூ.1,54,656/-** செலவு ஆகும்.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.310</u>**

**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**4) <u>மரு2/34180/09</u>**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பன்றிகள் அதிகமாக திறிகிறது. இதனால் பொதுமக்களுக்கும், சுகாதாரத்திற்கும் கேடு விளைகிறது. இதனால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் நலன்கருதி 10.01.2013–ஆம் தேதி முதல் பன்றிகள் வளர்க்க தடை செய்ய வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.311</u>**

**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**5) <u>H3/10196/07</u>**

மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களும் மேலும் கூடுதலாக பதிலி பணியாளர்கள் மண்டலம் எண்.2–ல் **3** நபர்களும், மண்டலம் எண்.**3**–ல் 5 நபர்களும் சேர்த்து ஆக மொத்தம் **68** நபர்களை வேலைவாய்ப்புத் துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் வேலைக்கு ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 68 நபர்கள் மட்டும் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 07.10.2012–ல் முடிவடைந்துவிட்டது. பொதுமக்கள் நலன்கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 09.10.2012 முதல் 05.01.2013 வரை 89 நாட்களுக்கு மட்டும் பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு மாநகராட்சி பொதுநிதியிலிருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.312</u>**

**<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>**

**6) <u>ம.நி. 3 / 000514 / 2013</u>**

மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் **1500** மில்லியன் கன அடி நீர் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நீரை குழாய் மூலம் கொண்டு வரப்பட்டு பண்ணைப்பட்டியில் சுத்தம் செய்து மதுரை மாநகராட்சி பகுதிகளுக்கு நாள்தோறும் **68** MLD மற்றும் **47** MLD கிடைக்கப் பெறுமாறு முதலாவது மற்றும் இரண்டாவது வைகை குடிநீர் திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போதைய மதுரை மாநகராட்சியின் பழைய மாநகராட்சி பகுதிகளுக்கு இரண்டு திட்டங்களின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் சுமார் **64** கி.மீ. தொலைவிற்கு இரண்டு பிரதான குழாய்களையும் பண்ணைப்பட்டியில் **115** மில்லியன் லிட்டர் கொள்திறனுள்ள சுத்திகரிப்பு நிலையத்தினையும் மதுரை மாநகராட்சி பராமரித்து வருகின்றது.

முதலாவது வைகை குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இத்திட்டத்தினை பராமரிப்பதற்கும் அரசின் ஒப்புதல் பெற்று கீழ்க்கண்ட பணியிடங்கள் தோற்றுவிக்கவும், அதுவரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களை கொண்டு (அயற்பணி அடிப்படையில்) கொண்டு பணி மேற்கொள்ளவும் மாமன்றத்தில் ஒப்புதல் பெற்று (மாமன்ற தீர்மானம் எண். 207, நாள். 05.02.1999) அரசின் ஒப்புதல் கோரப்பட்டது.

| | | |
|---|---|---|
| **1)** | உதவி நிர்வாகப் பொறியாளர் | - 1 |
| **2)** | உதவிப் பொறியாளர் | - 3 |
| **3)** | மின் கண்காணிப்பாளர் | - 1 |
| **4)** | மின் பணியாளர் | - 3 |

5) ஓட்டுநர் - 2
6) பராமரிப்பு உதவியாளர் மற்றும் காவலர் - 12
7) பைப்லைன் பிட்டர் Grade I, II - 6
8) ஹெறட்ஓர்க்ஸ் பிட்டர் - 1
9) ஹெறட்ஓர்க்ஸ் ஹெறல்ப்பர் - 6
10) பில்டர் பெட் ஆப்ரேட்டர் - 6
11) மெக்கானிக் - 6
12) வேதியிலர் - 1
13) வேதியிலர் உதவியாளர் - 1

**மொத்தம் - 49**

மேற்கண்ட பராமரிப்பு பணிகளுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் செய்யப்பட்டு வந்த கீழ்க்கண்ட 26 பணியிடங்களை மட்டும் மதுரை மாநகராட்சியில் தோற்றுவிக்கவும். இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை நிரப்பும் வரையில் 26 வாரிய பணியாளர்களை அயற்பணி அடிப்படையில், மதுரை மாநகராட்சியின் கீழ் பணிபுரிய அனுமதித்தும் அரசாணை எண். 208 ந.நி. (ம) கு.வ. துறை, நாள். 17.09.1999ல் உத்திரவிட்டது.

1) உதவி நிர்வாகப் பொறியாளர் – 1
2) உதவிப் பொறியாளர் – 3
3) மின் கண்காணிப்பாளர் – 1
4) மின் பணியாளர் – 3
5) ஓட்டுநர் – 2

6) பராமரிப்பு உதவியாளர் – 8
7) பைப்லைன் பிட்டர் Grade I, II – 5
8) உதவியாளர் – 1
9) வேதியிலர் – 1
10) வேதியிலர் உதவியாளர் – 1

**மொத்தம் – 26**

மேலும் இது தவிர வைகை அணையிலிருந்து மதுரை வரையுள்ள குழாய் வழி தடத்தை கண்காணிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பயன்படுத்தி வருவது போல் ஒப்பந்த அடிப்படையில் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ள அரசு ஆணையில் வழி வகை செய்துள்ளது.

அயற்பணியில் பெறப்பட்ட பணியாளர்கள் படிப்படியாக தாய்துறைக்கு சென்றுள்ள நிலையில் மதுரை மாநகராட்சி ஒப்பந்த பணியாளர்களை கொண்டு கடந்த 2001ம் ஆண்டு முதல் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட இரண்டு பிரதான குடிநீர்த் திட்டங்களை பராமரிப்பு செய்வதற்கு கூடுதல் பராமரிப்பு பணியாளர்கள் தேவைப்படும் நிலையில், ஏற்கனவே உள்ள ஒப்பந்த பணியாளர்களின் நீண்டகால முன் அனுபவத்தின் அடிப்படையில் மதுரை மாநகராட்சி மேற்கண்ட பராமரிப்பு பணிகளை திறம்பட பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட இரண்டாவது வைகை குடிநீர் திட்டப் பராமரிப்பு பணியினால் கீழ்க்கண்ட பணியிடங்கள் கூடுதலாக தேவைப்படுகின்றது.

| வ. எண். | பணியிடம் | முதலாவது வைகை குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் பணியிடம் | இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் பணியிடம் | தேவைப்படும் குறைந்தபட்ச பணியாளர்கள் | அயற்பணியில் தற்போது பணிபுரி பவர்கள் | பணி நியமன ஒப்புதல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | உதவி நிர்வாகப் பொறியாளர் | 1 | -- | 1 | 1 | |
| 2. | உதவிப் பொறியாளர் | 3 | -- | 3 | 2 | |
| 3. | மின் கண்காணிப்பாளர் | 1 | -- | 1 | -- | |
| 4. | வேதியிலர் | 1 | -- | 1 | -- | |
| | **தேர்ச்சி பணியாளர்கள்** | | | | | |
| 5. | மின் பணியாளர் | 3 | -- | 3 | -- | |
| 6. | ஓட்டுநர் | 2 | -- | 2 | -- | |
| 7. | பிட்டர் I & II | 5 | 2 | 7 | -- | |

| வ. எண். | பணியிடம் | முதலாவது வைகை குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் பணியிடம் | இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்திற்கு தேவைப்படும் பணியிடம் | தேவைப்படும் குறைந்தபட்ச பணியாளர்கள் | அயற்பணியில் தற்போது பணிபுரி பவர்கள் | பணி நியமன ஒப்புதல் |
|---|---|---|---|---|---|---|
| | **தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள்** | | | | | |
| 8. | பராமரிப்பு உதவியாளர் | 8 | 8 | 16 | -- | |
| 9.. | வால்வு ஆப்ரேட்டர் | 10 | 4 | 14 | -- | |
| 10. | உதவியாளர் | 1 | -- | 1 | -- | |
| 11. | வேதியிலர் உதவியாளர் | 1 | -- | 1 | -- | |
| | **மொத்தம்** | **36** | **14** | **50** | **3** | |

எனவே மேற்கண்ட இரண்டு வைகை குடிநீர் திட்டங்களை பராமரிப்பு செய்வதற்கு ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களை கணக்கில் கொண்டும் கூடுதலாக தேவைப்படும் பணியினையும் கருத்தில் கொண்டும் தேவையான பணியிடங்களை தோற்றுவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.313**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**7) மநி 2/ 1536/2012**

அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள்:12.05.1998-ன் அடிப்படையில் புதிய மாநகராட்சி பொது விதி 1996-ன்படி மதுரை மாநகராட்சிக்கு மொத்தம் 1058 தேர்ச்சி திறனற்ற பணியாளர்களுக்கான பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு ஏற்கனவே பணிபுரிந்து வரும் 701 பணியிடங்கள் தவிர தற்பொழுது 357 பணியிடங்கள் காலியாக உள்ளது.

அரசாணை எண்.237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 26.09.1996-ன்படி தேர்ச்சி திறனற்ற பணியாளர்களுக்கான பணியிடத்திற்கு கீழ்கண்ட கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**Unskilled worker By Direct Recruitment Must be able to read and write Tamil.**

எனவே மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள தகுதியின் அடிப்படையில் காலியாக உள்ள 357 தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடங்களில் 157 பணியிடங்கள் மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து காலமான பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்ய நடவடிக்கை எடுத்தது போக மீதி உள்ள 100 தேர்ச்சி திறனற்ற பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் பெற்று மேற்கண்ட பணியிடங்களை நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.314**
**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**8) மநி 2/ 033753 /2012**

அரசாணை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996 –ன்படி மதுரை மாநகராட்சியில் செவிலியர் பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**THE TAMIL NADU MUNICIPAL CORPORATION**
**PUBLIC HEALTH SUBORDINATE SERVICE RULES 1996**

| Name of post | Method of recruitment |
|---|---|
| Staff Nurse | i) By promotion from the holder of the post of Health visitors (Female) ; or<br>ii) By deputation of Staff Nurse from other Corporation or Local Body of Government service ; or<br>iii) By direct recruitment. |

கல்வித் தகுதி மற்றும் பணி நியமனம் : –

| Name of the Post | Method of Appolintment | Qualification |
|---|---|---|
| Staff Nurse | By direct recruitment | Must passed the Diploma in Staff Nursing Course. |

மதுரை மாநகராட்சி பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி செவிலியர் பணியிடத்திற்கு நிர்ணயம் செய்யப்படவில்லை. மற்றும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை தொடருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சிக்கு மொத்தம் 27 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் தற்போது 10 நபர்கள் பணியாற்றி வருகிறார்கள். மீதி 17 பணியிடங்கள் காலியாக உள்ளது.

அரசாணை எண். 220 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.09.2010–ன்படி மதுரை மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு மேற்கண்ட பகுதிகளில் உள்ள வரிவசூல் பணிகள் அனைத்தும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே தற்போது மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள 17 பணியிடங்களை தகுதிவாய்ந்த பணியாளர்களைக் கொண்டோ அல்லது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் பெற்று மேற்கண்ட பணியிடத்தினை நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.315**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**9) மநி 2/ 33754 /2012**

அரசாணை எண்.**237**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996 –ன்படி மதுரை மாநகராட்சியில் மருந்தாளுநர் பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**THE TAMIL NADU MUNICIPAL CORPORATION**
**PUBLIC HEALTH SUBORDINATE SERVICE RULES 1996**

| Name of post | Method of recruitment |
|---|---|
| Pharmacist | i) By deputation of Pharmacists from other Corporation or Local Body or Government Service ; or<br>ii) By transfer from the holder of the post of Health Visitor ; or<br>iii) By direct recruitment. |

**கல்வித் தகுதி மற்றும் பணி நியமனம் : –**

| Name of the Post | Method of Appolintment | Qualification |
|---|---|---|
| Pharmacist | By direct recruitment | Must possess a Diploma in Pharmacy. |

மதுரை மாநகராட்சி பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசாணை எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.09.1996-ன்படி மருந்தாளுநர் பணியிடத்திற்கு நிர்ணயம் செய்யப்படவில்லை. மற்றும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை தொடருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாநகராட்சிக்கு மொத்தம் 31 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் தற்போது 11 நபர்கள் பணியாற்றி வருகிறார்கள். மீதி 20 பணியிடங்கள் காலியாக உள்ளது.

அரசாணை எண். 220 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.09.2010–ன்படி மதுரை மாநகராட்சியுடன் 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 ஊராட்சிகள் இணைக்கப்பட்டு மேற்கண்ட பகுதிகளில் உள்ள வரிவசூல் பணிகள் அனைத்தும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே தற்போது மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள 20 பணியிடங்களை தகுதிவாய்ந்த பணியாளர்களைக் கொண்டோ அல்லது வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் பெற்று மேற்கண்ட பணியிடத்தினை நிரப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.316**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**10) மதி 1/33519/2012**

பார்வை : தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசாணை எண் : (GS) 235 நாள்: 30.10.2012-ம்.

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசாணை எண்.(GS)235, நாள்: 30.10.2012-ம் தேதியில் 01.07.2007-க்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடங்களை அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி வரன்முறைப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.317**

**அடுத்த மாமன்ற கூட்டத்தில் சேர்க்க குறிப்பு ஒத்தி வைக்கப்பட்டது.**

**11) மநி 2/04924/98**

மதுரை மாநகராட்சி பொறியியல் பிரிவிற்கு அரசு ஆணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.05.1998-ன்படி அனுமதிக்கப்பட்ட உதவிப் பொறியாளர் பணியிடத்தில் காலியாக உள்ள 15 உதவிப்பொறியாளர் பணியிடங்களை நேரடியாக பணிநியமனம் செய்வதற்கு, மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.134, நாள் 30.01.2012-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வனுமதியை தொடர்ந்து வேலைவாய்ப்பு சம்பந்தமாக அரசு ஆணையிட்டுள்ளவாறு, தகுதியுள்ள பொறியியல் பட்டதாரிகளின் பெயர் பட்டியலை அனுப்பி வைக்கும்படி, மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து 70 பொறியாளர்களின் பெயர் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டது. இப்பட்டியலில் கண்ட பொறியாளர்களின் அசல் கல்விச்சான்றுகளை சரிபார்க்கும் பொருட்டு 04.01.2013 அன்று நடைபெறவுள்ள நேர்காணலுக்கு ஆஜராகும்படி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்நேர்காணலில் 33 நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். மேற்கண்ட 33 நபர்களின் அசல் கல்விச்சான்றுகளை சரிபார்க்கும் பணிக்கு கீழ்கண்ட அலுவலர்கள் அடங்கிய இரு குழுக்கள் அமைக்கப்பட்டது.

**குழு எண். 1**

| வ.எண் | பெயர் | | பதவி |
|---|---|---|---|
| 1) | திரு.R.J.A.ரவீந்திரன் | – | உதவி ஆணையாளர், (வருவாய்)(பொ) |
| 2) | திரு. பாஸ்கரன் | – | உதவி ஆணையாளர், (கணக்கு) |
| 3) | திருமதி.ஆர்.எஸ் சாந்திமாய் | – | உதவி ஆணையாளர், (பணி) (பொ) |

**குழு எண். 2**

| வ.எண் | பெயர் | | பதவி |
|---|---|---|---|
| 1) | திரு.ஏ.தேவதாஸ் | – | உதவி ஆணையாளர், (மண்டலம் எண் 4) |
| 2) | திருமதி.சின்னம்மாள் | – | உதவி ஆணையாளர், (மண்டலம் எண் 3) |
| 3) | திரு.ரெஹேபெயம் | – | உதவி ஆணையாளர், (மண்டலம் எண் 1) |

மேற்கண்ட குழுவினரால் 33 பொறியாளர்களின் அசல் கல்விச்சான்றுகள் சரிபார்க்கப்பட்டது. பின்பு நடைபெற்ற நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும், தனியர் சமர்ப்பித்த கல்விச்சான்றுகளின் அடிப்படையிலும், கீழ்கண்ட பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண். | வகுப்புவாரி சுற்று | பெயர் | பதிவு எண். |
|---|---|---|---|
| 1 | ஷெடியூல் வகுப்பினர் (SC (W) / NP) | திருமதி.P.V.கிருஷ்ணா | 1994 F01569 S.F.30.03.1994 |
| 2 | மிகவும் பிற்படுத்தபட்டோர் (MBC (G) / NP) | திரு.R.சங்கிலிராஜன் | 1994 M04830 S.F.27.06.1994 |
| 3 | பொதுப்போட்டி (OC(W)/NP) | திருமதி.M.பொன்மணி | 1998F08054 S.F.05.10.1998 |
| 4 | பொதுப்போட்டி (OC(G)/ NP) | திருமதி.S.மஞ்சுளாதேவி | 1998 F06128 S.F.13.08.1998 |
| 5 | பொதுப்போட்டி (OC(W)/NP) | திருமதி.R.ராஜசீலி | 1999 F05352 S.f.29.06.1999 |

| | | | |
|---|---|---|---|
| **6** | ஷெடியூல் வகுப்பினர் (SC (G) / P) | திரு.K.S.கந்தப்பா | MDP 1995 M 00007190 S.F.23.08.1995 |

மேற்கண்ட **6** பொறியாளர்களை வேலை வாய்ப்பு அலுவலக முன்னுரிமை அடிப்படையிலும் (Strictly Seniority Basis) மற்றும் வகுப்பு வாரிசுற்று அடிப்படையிலும் மதுரை மாநகராட்சியில் உதவிப்பொறியாளர்களாக ரூ.9300-34800+GP 4600 என்ற சம்பள விகிதத்தில் பணி நியமனம் செய்யவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.318**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை நகராட்சி**

**மதுரை**
**நாள் : 09.01.2013**

**நன்றி தீர்மானம் .1**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் 20 ரூபாய் மதிப்பிலான 1 கிலோ பச்சரிசி, 40 ரூபாய் மதிப்பிலான 1 கிலோ சர்க்கரை மற்றும் பொங்கல் பண்டிகைக்கான இதர பொருட்கள் வாங்குவதற்காக 100 ரூபாய் ஆக மொத்தம் 160 ரூபாய் மதிப்பில் 1 கோடியே 84 லட்சம் குடும்பங்கள் தித்திக்கும் பொங்கலாக தமிழர்கள் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்த உலக தமிழ் இனத்தின் பாதுகாவலர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.299**

**மேயர்**

**நன்றி தீர்மானம் .2**

பெண் சிசுவை காப்பாற்ற தாயாக நான் இருக்கிறேன் என்று தொட்டில் குழந்தை திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளை காப்பாற்றி அன்னை தெரசாவின் மறு உருவமாய் திகழும் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இன்று இந்திய நாட்டிற்கு மட்டுமல்லாமல் உலகத்திற்கே முன் மாதிரியாய், பெண்ணினத்தின் மீதான பாலியல் வன்முறைகளுக்கு அடியோடு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக 13 அம்ச திட்டங்களை அறிவித்து இதன் மூலம் ஒட்டுமொத்த பெண் சமுதாயத்திற்கு பாதுகாப்பு அளித்த தென்னகத்தின் ஜான்சிராணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இக்கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.300**

**மேயர்**